விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 244 வள்ளுவர் ஆண்டு 2053 ஆவணி 04 சனிக்கிழமை (20.08.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## பயங்கரவாத சட்டம் விரைவில் நீக்கப்படும்

### யாழில் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த உறுதி

(யாழ்ப்பாணம்)
இலங்கையில் தற்போது நடைமுறையில் இருக்கும் பயங்கரவாத தடைச்சட்டம் விரைவில் நீக்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

(11ஆம் பக்கம் பார்க்க)



## மிக மோசமான பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்கியுள்ளது

### ஐ.நா சபை தெரிவிப்பு

(நியூயோர்க்)
இலங்கையின் பொருளாதார நெருக்கடி நாட்டின் சுகாதார கட்டமைப்பினை வீழ்ச்சியின் இறுதிக் கட்டத்திற்கு இட்டுச் சென்றுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.
இலங்கை அதன் வரலாற்றில் மிக 12



## கொரோனா 6 மரணம்

(கொழும்பு)
இலங்கையில் கோவிட் தொற்றின் காரணமாக மேலும் 6 பேர் மரணமாகியுள்ளனர்.
இதில் 30 வயதுக்குட்பட்ட பெண் ஒருவரும் 30க்கும் 11

## பாதுகாப்பு அதிகாரிகளுடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

(கொழும்பு)
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாதுகாப்புப் பிரிவின் பிரதானிகளுக்கும் இடையிலான



11

# தமிழர்களின் நீதிக்கான போராட்டம் தொடர்பில்

## பிரித்தானிய பிரதமர் வேட்பாளர் புலம்பெயர் தமிழர்களுடன் கலந்துரையாடல்

(லண்டன்)
தமிழர்களின் நீதிக்கான போராட்டம், 2009ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தத்தின் போதான வலிகள், தாக்கங்கள் தொடர்பில் புலம்பெயர் தமிழர்களுடன் பிரித்தானிய பிரதமர் வேட்பாளர் ரிஷி சுனக் கலந்துரையாடியுள்ளதாக த கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

தமிழர்களின் நீதிக்கான போராட்டத்திலும் இறுதி யுத்தத்தின்போதும் தமிழர்கள் எதிர்நோக்கிய நெருக்கடிகளுக்கும் அவை குறித்த பொறுப்புக்கூறல் தொடர்பிலும் ரிஷி சுனக் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.
தேர்தலுக்கு முன்னதாக பிரித்தானிய கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைமை வேட்பாளர் ரிஷிசுனக், தமிழ் தரப்பினரை சந் 12

## 2027ஆம் ஆண்டுவரை மின்சார நெருக்கடி தொடரலாம்

(கொழும்பு)
மின்சார விநியோகத்திற்காக உரிய வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்படாவிட்டால் 2027 ஆம் ஆண்டு வரை பல்வேறுபட்ட சந்தர்ப் 11

## 12 எரிபொருள் நிரப்பு நிலையங்களின் விநியோகம் நிறுத்தம்

(கொழும்பு)
வழிகாட்டுதல்களுக்கு இணங்கத்தவறிய 12 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் இடைநிறுத்தப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன 11

## அரசை எதிர்ப்போருக்கு எதிராக பயங்கரவாத தடைச்சட்டம் பயன்படுத்தப்படுகின்றது

### மன்னிப்புச் சபை அதிருப்தி

(கொழும்பு)
அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே பயங்கரவாத புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக வெளி 11

## நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ரணிலுடன் பேச்சு நடத்தத் தயார்

### எதிர்க் கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)
"பயனளிக்கும் மறுசீரமைப்புச் செயற்பாட்டின் ஊடாக நாட்டைக் கட்டியெழுப்பும் நோக்கில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் மீண்டும் பேச்சு நடத்த நான் தயார்" என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று தெரிவித்தார்.
அவர் மேலும் கூறுகையில், 11

## இலங்கையின் பொருளாதார நெருக்கடி, அரசியல் நிலைவரம் தொடர்பில்

### அமெரிக்கத் தூதுவருடன் சஜித் கலந்துரையாடல்

(கொழும்பு)
இலங்கையின் பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலைவரம் தொடர்பில் அமெரிக்கத் 11



## யாழ்.நகர்ப் பகுதியில் ஆணின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் நகரில் அமைந்துள்ள புதிய சந்தை கட்டடத் தொகுதிக்குள் ஆண் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நேற்றுக் காலை குறித்த சடலம் அவதானிக்கப்பட்டு யாழ்ப்பாணப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.
விசேட தேவைக் 12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் எரிசக்தி துறையில் முதலீடுகளை அதிகரியுங்கள்

## ஈரானிடம் பிரதமர் வேண்டுகோள்

(கொழும்பு)

இலங்கையின் எரிசக்தி துறையில் முதலீடுகளை அதிகரிக்குமாறு ஈரான் தூதுவர் ஹஷேம் அஷ்ஜசாதேவிடம் பிரதமர் தினேஷ் குணவர்தன நேற்று வெள்ளிக்கிழமை வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கையின் சுத்திகரிப்பு திறன் அதிகரிப்பு மற்றும் நிலையான எரிசக்தி தொடர்பில் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாக தூதுவருக்கு விளக்கமளித்த பிரதமர், எரிபொருள் மற்றும் எரிசக்தி துறையில் அதிக அனுபவமுள்ள நாடாக ஈரானினால் முதலீடுகளை அதிகரிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை வலுப்படுத்துவதே தமது எதிர்பார்ப்பு எனத் தெரிவித்த தூதுவர் அஷ்ஜசாதே எதிர்வரும் காலங்களில் ஈரானும் இலங்கைக்கு மருந்துப் பொருட்களை நன்கொடையாக வழங்க உள்ளதாகத் தெரிவித்தார். (ம-7)

# இன்றும் நாளையும் 3 மணி நேர மின்வெட்டு

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இன்றும் நாளையும் 3 மணித்தியால மின்வெட்டை அமுல்படுத்த அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, A முதல் L வரையான வலயங்களிலும் P முதல் W வரையான வலயங்களிலும் பகல் வேளையில் ஒரு மணித்தியாலம் 40 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது.

இந்த வலயங்களில் இரவு வேளையில் 1 மணித்தியாலம் 20 நிமிடங்களுக்கு மின்வெட்டு அமுல்படுத்தப்படும் என இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-7)

# குற்றப்புலனாய்வினர் மைத்திரியிடம் விசாரணை

(கொழும்பு)

ரோயல் பார்க் கொலைக் குற்றவாளிக்கு பொதுமன்னிப்பு வழங்கியமை தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதியின் கொழும்பில் உள்ள அவரது இல்லத்தில் வைத்து நேற்று முன்தினம் வியாழக்கிழமை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மூன்று மணிநேரம் வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

பதிவு செய்யப்பட்ட வாக்கு மூலம் சட்டமா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கடந்த 2005ஆம் ஆண்டு இராஜகிரியவில் உள்ள ரோயல் பார்க் காண்டோமினிய வளாகத்தில் இவோன் ஜோன்சன் கொலை செய்யப்பட்ட வழக்கில் ஷ்ரமந்த ஜயமஹாவுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

அவருக்கு 2012 இல் ஆரம்பத்தில் 12 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனினும் பின்னர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் கொலைக் குற்றவாளி என அறிவிக்கப்பட்டார்.

அத்துடன், ரோயல் பார்க் கொலை வழக்கில் உச்ச நீதிமன்றம் அவருக்கு மரண தண்டனை விதித்தது.

எனினும், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவருக்கு 2016 ஆம் ஆண்டு ஜனாதிபதி மன்னிப்பு வழங்கியிருந்தார். (ம-7)

# தெளிவான நிபந்தனைகளுடன் இலங்கைக்கு உதவுங்கள்

## சர்வதேசத்திடம் கர்தினால் கோரிக்கை

(கொழும்பு)

ஜனநாயகம், சட்டத்தின் ஆட்சி, நேர்மை மற்றும் மனித உரிமைகளை பாதுகாக்கும் வகையில் தெளிவான நிபந்தனைகளுடன் இலங்கைக்கு உதவிகளை வழங்குமாறு கர்தினால் மல்கம் ரஞ்சித் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த மூன்று காரணிகளால், இலங்கையின் ஜனநாயகம் பாரியளவில் சிதைவடைந்துள்ளதாக மல்கம் ரஞ்சித் சுட்டிக்காட்டியுள்ளார்.

சட்டத்தின் ஆட்சி படிப்படியாக சீர்குலைந்து, நீதித்துறையில் அரசியல் தலைவர்களின் தலையீடானது, நீதியை ஒரு பிரச்சினையாக மாற்றியுள்ளது.

ஊழல்களை மேற்கொண்டு ஒரு சில குடும்பங்கள் மட்டுமே முடிவில்லாமல் சம்பாதித்து வருகின்றன.



பல குடும்பங்கள் வறுமையில் வாடுகின்றன. மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருகின்றன.

இதற்கு எதிராக மக்கள் எதிர்ப்பு தெரிவிக்கும்போது, அவை அடக்குமுறைக்கு ஆளாகின்றன.

எனவே இந்தத் தவறுகள் சரி செய்யப்படுவதை உறுதிப்படுத்த சர்வதேச சமூகம் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கர்தினால் கோரியுள்ளார்.

தவறான கொள்கைகளாலும், தவறான பொருளாதார நிர்வாகத்தாலும், நிதி நெருக்கடி கடுமையாக மாறியுள்ளது.

அரசாங்கங்களின் தவறான திட்டங்களால் நாட்டில் பெரும் கடன் பிரச்சினை ஏற்பட்டு, அதிலிருந்து எப்படி மீள்வது என்று தெரியவில்லை.

அதனால், தேசிய வருமானமும், உற்பத்தித் திறனும் குறைந்துள்ளதால், அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் கர்தினால் குறிப்பிட்டுள்ளார். (ம-7)


கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் கிளிநொச்சி நிறைவேற்று எந்திரி அலுவலகம் கட்டடங்கள் திணைக்களத்தின் தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய **மரியநாயகம் செல்ரன்றாஜ்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி**

**மரியநாயகம் யசிந்தா ஜெயராணி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 1950.07.20

மறைவு 2022.08.18

(12493)

இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம், வட மாகாணம்


# பல்கலை. ஆர்ப்பாட்டத்தில் கைதானவர்கள் விடுவிப்பு

கொழும்பில் அரசுக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட அனைத்து பல்கலைகழக மாணவர் ஒன்றியத்தின் 16 பேர் பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நேற்று முன்தினம் கொழும்பில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கைதான 19 பேர் நேற்று கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப் பட்டனர்.

அதன்போது, 16 பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன், அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே உள்ளிட்ட 3 பேரை தடுப்புக் காவலில் வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர். (ம-7)


திருமறைக் கலாமன்றம்



எமது கலைத்தூது அழகியல் கல்லூரி மாணவி

செல்வி எறின் கிளன்சியா கிளன்சியஸ் லொயலா

அவர்களின்

பரத நடன அரங்கேற்றம்

காலம்: இன்று (20.08.2022) சனிக்கிழமை

நேரம்: பி.ப 2.30 மணி

இடம்: வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.

செல்வி எறின் கிளன்சியா கிளன்சியஸ் லொயலா அவர்கள் நடனக் கலையை ஸ்ரீமதி சுதர்சினி கரன்சன் அவர்களிடம் கற்று அரங்கேறுகிறார்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



இன்று பரத நடன அரங்கேற்றத்தை மேற்கொள்ளும் எமது மாணவி செல்வி எறின் கிளன்சியா கிளன்சியஸ் லொயலா அவர்களை வாழ்த்தி நிற்பதுடன் இவரது வளர்ச்சிக்குக் காரணமான பெற்றோர், உறவினர்களையும் குருஷேஸ்திரமாக நின்று பயிற்றுவித்த எமது நடன ஆசிரியை ஸ்ரீமதி சுதர்சனி கரன்சன் அவர்களையும் பாராட்டுகின்றோம்.

இயக்குநர்கள், அங்கத்தவர்கள்

திருமறைக் கலாமன்றம் - 238, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

(C-4760)


# பருத்தித்துறை நகரில் 7 தொலைபேசிகள் திருட்டு

(கரணவாய்)

பருத்தித்துறை நகரில் உள்ள தொலைபேசி விற்பனை நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த பெறுமதிமிக்க 7 தொலைபேசி மற்றும் மீள் நிரப்பு அட்டைகள் திருடப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை இரவு வர்த்தக நிலையத்தை பூட்டிவிட்டு சென்ற அதன் உரிமையாளர் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் வர்த்தக நிலையத்தை திறந்தபோதே வர்த்தக நிலையம் உடைக்கப்பட்டு தொலைபேசி மற்றும் தொலைபேசிக்கான மீள் நிரப்பு அட்டைகள் திருடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. அதிகாரிகள் நேற்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

**ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் (UNDCO) ஆசிய-பசுபிக் பிராந்தியத்திற்கான பணிப்பாளர் டேவிட் மெக்லாக்லன்-கார் நேற்று வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தார்.**



யாழ். மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலர் க.மகேசனை டேவிட் மெக்லாக்லன்-கார் சந்தித்தார்.

இதன்போது இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் வதிவிடப் பிரதிநிதி ஹனாசிங்கரும் உடனிருந்தார்.

தற்போதைய பொருளாதார சூழ்நிலையின் காரணமாக வாழ்வாதாரம் மற்றும் கடற்றொழிலுக்கு உள்ள சவால்கள் குறித்து அரசாங்க அதிபரிடம் கேட்டறிந்தேன் என டேவிட் மெக்லாக்லன்-கார் தெரிவித்தார். ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய-பசுபிக் பிராந்தியத்திற்கான பிராந்திய பணிப்பாளர் டேவிட் மெக்லாக்லன்-கார் கடந்த ஒகஸ்ட் 16 ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்ததுடன் பல்வேறு தரப்புக்களையும் சந்தித்தார். (4-33-104)

# வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கிருஷ்ண ஜெயந்தி உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்பு மிக்க வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலய கிருஷ்ண ஜெயந்தி உற்சவம் இன்று சனிக்கிழமை இரவு விசேட அபிஷேக ஆராதனையுடன் சிறப்பாக இடம்பெற உள்ளது.

இரவு 7-8 மணி வரை சமயச் சொற்பொழிவு நிகழ்வும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகள், நிருத்திய அர்ப்பண நிகழ்வு, இசை நிகழ்ச்சிகள் ஆகியன இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நள்ளிரவு 12 மணிக்கு கண்ணன் பிறப்பு விசேட அபிஷேகம், 1008 சங்காபிஷேகம் என்பன இடம்பெற்று அதிகாலை 4 மணியளவில் வல்லிபுர மாயவன் பூந்தண்டிகையில் வெளி உலாவரும் திருக்காட்சியும் இடம்பெறும்.

இதன்போது ஆலய வடக்கு வீதியில் கண்ணன் வெண்ணெய் திருடல், உறியடித்தல் போன்ற நிகழ்வுகளும் நடைபெறும். (4-18)

# கட்டுப்பாட்டை இழந்த கார் மின்கம்பத்துடன் மோதியது

## நீர்வேலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

கார் ஒன்று மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளான சம்பவம் நீர்வேலி பூதர்மடப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நெல்லியடிக்குச் சென்று கொண்டிருந்த கார் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி அங்கிருந்த மின்கம்பத்துடன் மோதி இந்த விபத்துச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

அதிஉயர் மின்னழுத்த கம்பம் மீது மோதிய போது காரின் எயார்பாக் (Airbag) உடனடியாக வெளிவந்ததால் சாரதியும் அவருக்கு அருகில் இருந்து பயணித்தவருக்கும் எந்த உயிர் சேதங்களும் ஏற்படவில்லை. எனினும் காரின் முன்பகுதியில் சேதம் ஏற்பட்டுள்ளது. (4-104)

### ஓவியக் கண்காட்சியும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

T.P ஹன்ற் ஞாபகார்த்த ஓவியக் கூடத்தின் நான்காம் ஆண்டு நிறைவையொட்டி ஓவியக்கூடத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளின் ஆக்கங்கள் அடங்கிய ஓவியக் கண்காட்சியும் பரிசளிப்பு நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு ஓவியக் கூடத்தின் மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வு ஓவியக்கூடத்தின் ஸ்தாபகர் திருமதி. யோகமணி அழகரட்ணம் தலைமையில் நடைபெறவுள்ளது. இவ் ஓவியக் கண்காட்சிக்கு மாணவர்கள், பெற்றோர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் அனைவரும் கலந்து கொண்டு கண்காட்சியினை பார்வையிடுமாறு ஓவியக் கூட நிர்வாகத்தினர் அழைத்துள்ளனர். (4)

### மாணவனை காணவில்லை

(நெளுக்குளம்)

வவுனியாவில் 15 வயது மாணவன் ஒருவனை காணவில்லை என பூவரசங்குளம் பொலிஸில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா, பம்பைமடு, செக்கட்டிபுலவு பகுதியைச் சேர்ந்த மாணவனே கடந்த 16ஆம் திகதி அதிகாலை காணாமல் போயுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக பூவரசங்குளம்பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (4-299)

# சட்டவிரோத செயல்களுக்கு ஏதுவான பாழடைந்த கட்டடங்களை இடிக்க தீர்மானம்

## சாவகச்சேரி நகரசபை

(சாவகச்சேரி)


சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பொது இடங்களில் சட்டவிரோதச் செயற்பாடுகளுக்கு ஏதுவாக காணப்படுகின்ற பாழடைந்த கட்டடங்களை இடித்தழிக்க தீர்மானித்திருப்பதாக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி.சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

சாவகச்சேரி நகரசபையின் ஆளுகைக்குட்பட்ட உதயசூரியன் பகுதியில் பாழடைந்த நிலையில் காணப்படுகின்ற சுகாதாரத் தொழிலாளர் விடுதியில் சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறுவதாக பொது மக்கள் நகரசபையின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளனர்.

அதே சமயம் மீசாலைப் பகுதியில் உள்ள பயன்படுத்தாத பேருந்து தரிப்பிடம் ஒன்றிலும் இரவு வேளைகளில் சமூக விரோதச் செயற்பாடுகள் இடம்பெறுவதாக எமக்கு தொடர்ச்சியான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

இதனால் பொதுமக்களின் நலனைக் கருத்திற் கொண்டு பாவனைக்கு ஏற்ற வகையில் இல்லாத குறித்த பொதுக் கட்டடங்களை இடித்தழிக்க சபை நடவடிக்கை எடுத்துள்ளது என அவர் தெரிவித்தார். (4-30)



வரலாற்றுச் சிறப்பு மிக்க யாழ்.நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குபேர திக்கு குமாரவாசல் ஸ்ரீ குமார கோபுரம் கலசாபிஷேகம் ஆலயப் பெருந்திருவிழாவின் திருக்கார்த்திகை உற்சவ நன்னாளான நேற்று வெள்ளிக்கிழமை காலை 6 மணிக்குச் சிறப்பாக நடைபெற்றது. (படங்கள்:- சிவசாந்தன், ரவிசாந், கஜிந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இலங்கை கிரிக்கெட் பிரிவு III - 2022

# பிரியங்கனின் அதிரடி சதத்துடன் அரையிறுதிக்குள் விக்ரோறியன்ஸ்



இலங்கை கிரிக்கெட்டின் நெறிப்படுத்தலில் யாழ்.மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் 50 ஓவர் கொண்ட தொடரின் 2 ஆவது காலிறுதிப் போட்டியில் விக்ரோறியன்ஸ் அணி விங்ஸ் அணியை 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்று அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய விங்ஸ் அணி 42.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 149 ஓட்டங்களைப் பெற்றது. யுவீவன் - 26, எட்வின்-23, ஒநாசியஸ்-21 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்து வீச்சில் விக்ரோறியன்ஸ் அணியைச் சார்ந்த பிரதீஸ் 9.5 ஓவர்களில் 27 ஓட்டங்களை கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் செந்தூரன் 7 ஓவர்களில் 19 ஓட்டங்களை கொடுத்து 03 விக்கெட்டுக்களையும் பிரியங்கன் 10 ஓவர்களில் 35 ஓட்டங்களைக் கொடுத்து 02 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.150 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய விக்ரோறியன்ஸ் அணி 29.2 ஓவர்களில் 5 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்கள்ளைப் பெற்றது. பிரியங்கன் - 106 (பிரியங்கள் அடித்த இந்தச் சதம் தொடரின் 3ஆவது சதம் என்பது குறிப்பிடத்தக்கது).தூயவன்-22ஓட்டங்கள். பந்துவீச்சில் விங்ஸ் அணி சார்பாக செயோன் 03 ஓவர்களில் 18 ஓட்டங்களைக் கொடுத்து 02 விக்கெட்டுக்களையும் ஒநாசியஸ் 9 ஓவர்களில் 29 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து 13ஆண்டுகளாக நடத்தி வரும் யாழ். நகரின் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வுக்கு விக்ரோறியன்ஸ் அணி 8.14 புள்ளிகளையும் விங்ஸ்அணி 1.99 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (4)

# சிம்பாவே அணிக்கெதிரான முதல் ஒருநாள் தொடர்

## இந்தியா அபார வெற்றி



சிம்பாவே அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், இந்தியக் கிரிக்கெட் அணி 10 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றுள்ளது.

ஹராரே மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பவே அணி, 40.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 189 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சகப்வா 35 ஓட்டங்களையும் ங்கறவ 34 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து 190 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய இந்தியக் கிரிக்கெட் அணி, 30.5 ஓவர்கள் நிறைவில் எவ்வித விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை கடந்தது.

இதனால், இந்தியக் கிரிக்கெட் அணி 10 விக்கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் சார்பாக ஷிகர் தவான் ஆட்டமிழக்காது 81ஓட்டங்களையும் சுப்மான் கில் ஆட்டமிழக்காது 82 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (4)


# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2692

### திவ்யா

வாத்தியார்— கரண்ட் போகும் போது முதல்ல எதை எடுப்பீங்க சார்ச்லைட்,எமர்ஜன்சி லைட்?
மாணவன்— இரண்டுமில்லை சார் அப்பா பாக்கெட்டில இருக்குற பணத்தை எடுப்பேன்.

### சுஜாந்த்

திறமையும் தன்னம்பிக்கையும் உள்ளவர்கள் பிரச்சினைகளுக்கு மேல் உறங்குகிறார்கள். இல்லாதவரக்ள் மூழ்குகிறார்கள்.



### கௌரி



பாத்துடா மகனே பேஸ்புக்ல பேக் ஐடி நிறைய சுத்துது ஏமாந்துடாதே. ஆமாம் அப்பா நேத்து நைட் 1 மணி வரைக்கும் கடல போடடிய்யே சாந்தியின்னு ஒரு ஆண்டிகிட்ட அது என் ஐடி தாம்ப்பா என் கிட்ட தான் பேசுன.

### சுஜித்தா

எனது 7 வயதில் மைக்கல் ஜாக்சனின் வீடு போல எனக்கும் ஒரு வீடு வேண்டுமென என் தந்தையிடம் கூறினேன். அதற்கு அவர் "ஏழையின் கனவு வெறும் கனவாகவே இருக்கும்" எனக் கூறினார். இன்று என்னிடம் அதைவிட சிறந்த வீடு உள்ளது. ஏழையின் கனவும் நிறைவேறியது.
-கிறிஸ்ரியனோ றொனால்டோ-

### முகதி

உப்பு சைவமா? அசைவமா என்று மிஸ் கேட்டாங்க அப்பா நீ என்டா சொன்ன?



சாம்பார்ல போட்டா வைசம் கறிக்குழம்புல போட்டா அசைவம்னு சொன்னேன் அப்பா.

### தாரணி

நீ ஏழையாக இருந்தாலும் மனதில் பணக்காரனாக இரு. பணக்காரனாக ஆன பின்னும் நடத்தையில் ஏழையாக இரு.



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க இந்தியா எச்சந்தர்ப்பத்திலும் தயார்

## இந்திய வெளிவிவகார அமைச்சர்

(கொழும்பு)

**"இலங்கை சர்வதேச நாணய நிதியத்திடம் மேற்கொள்ளும் வேலைத்திட்டங்களுக்கு இந்தியா எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஒத்துழைப்பை வழங்கத் தயாராக இருக்கின்றது." என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்தார்.**

இவ்வருடம் மட்டும் இந்தியா 3.8 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தாய்லாந்தில் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தில் 'இந்தோ - பசிபிக் பற்றிய இந்தியாவின் பார்வை' என்ற தலைப்பில் விரிவுரை ஆற்றிய பின்னர் தொடர்ச்சியான கேள்விகளுக்குச் ஜெய்சங்கர் பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (நி)



# காய்ச்சல் ஏற்பட்டால் பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்-மருத்துவ நிபுணர்

(கொழும்பு)

கடுமையான காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மரு த்துவரை நாடுமாறு அவசர எச்சரிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் ஊடகவியலாளர் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

குறிப்பாக, இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போது ரிட்ஜ்வே சிறுவர்கள் மருத்துவமனையின் விசேட மருத்துவ நிபுணர் கோசல கருணாரத்ன குறித்த எச்சரிக்கையை வழங்கி யுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஒமிக்ரோன் வைரஸ் திரிபால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு கடுமையான காய்ச்சல் ஏற்படுவதற்கான அபாயம் உள்ளது.

மேலும், காய்ச்சலால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளு க்கு இரண்டாவது நாளில் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டால் உடனடியாக மரு த்துவர் ஒருவரை நாடுங்கள்.

இவ்வாறான நிலையில் உள்ள பிள்ளைகளுக்கு ரெபிட் ஆன்டிஜென் பரிசோதனை அல்லது டெங்கு ஆன்டி ஜென் பரிசோதனை ஒன்றை மேற்கொள்வது அவசியம்.

மேலும், காய்ச்சல் ஏற்பட்டு வீட்டில் இருக்கும் நிலைமையில், பரசிட்டமோலை மாத் திரம் கொடுப்பது சிறந்தது. அத்துடன், அவர்களை பாடசாலைக்கு செல்ல அனுமதிக்க வேண்டாம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

## சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகங்கள்

# தகவல்களை வழங்க 1929 ஐ அழைக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)

இணையத்தளம் ஊடாக சிறுவர்கள் மீதான துஷ்பிரயோகம் தொடர்பிலான தகவல்களை 1929 என்ற இலக்கத்திற்கு வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி உதயகுமார அமரசிங்க இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

இணையத்தளம் ஊடாக கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதன் காரணமாக சிறுவர்கள் ஸ்மார்ட் தொலைபேசிகளை பயன்படுத்துகின்றனர்.

இதன்போது, பலர் சிறுவர்களை பல்வேறுபட்ட குற்றச் செயல்களில் ஈடுபடுத்துகின்றனர்.

இதுபோன்ற பல சம்பவங்கள் தற்போது பதிவாகியுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் கலாநிதி உதயகுமார அமரசிங்க தெரிவித்துள்ளார். (நி)

# நிலக்கரி வழங்க முன்வந்த ரஷ்ய நிறுவனம்

(கொழும்பு)

நுரைச்சோலை அனல்மின் நிலையத்திற்கு நிலக்கரி வழங்க ரஷ்ய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது.

நிலக்கரி விநியோகத்திற்கான விலை மனுகோரலுக்கு பதிலளித்த இரண்டு நிறுவனங்களில், ரஷ்ய நிறுவனம் ஏலம் பெறுவதற்கான வாய்ப்புகளை அதிகம் கொண்டுள்ளதாகவும் மற்றைய நிறுவனங்களும் மேன்முறையீடு செய்யலாம் என்றும் லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜகத் பெரேரா தெரிவித்தார். (நி)

# 20 வீதத்திற்கும் அதிகமாக குறைவடைந்த மின்பாவனை

(கொழும்பு)

கடந்த இரண்டு மாதங்களில் நாட்டின் மின்சார பாவனை 20% இற்கும் அதிகமாக குறைந்துள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

தினசரி மின் நுகர்வு விகிதம் குறைந்தது 48 மெகாவாட் என்றும் உச்ச நேரத்திற்கு 2,800 மெகாவாட் மின்சாரம் தேவை என்றும் குறிப்பிட்ட அவர்,

கடந்த இரண்டு மாதங்களில், மின் நுகர்வு 38 முதல் 40 மெகாவாட் வரை இருந்தது. உச்ச நேரத்தில் தேவைப்படும் மின்சாரத்தின் அளவு 2,100 மெகாவாட்டாக குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி)

# இராசிபலன்

20.08,2022
ஆவணி 04, சனிக்கிழமை
நவமி பின்னிரவு 4.01 மணிவரை

ரோகிணி முழுவதும்.
சுபநேரம் 3.05-4.35 மணிவரை
இராகுகாலம் 9.05-10.35 மணிவரை.

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி
சந்திராஷ்டமம் - சுவாதி

**வளவன்**


மேஷம்

துணிவும் தன்னம்பிக்கையும் அதிகரிக்கும் நாள், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, யோசிக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள்.


கடகம்

அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


துலாம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, சேமிப்புக்கள் கரையக்கூடிய நிலை ஏற்படலாம், விட்டுக் கொடுத்துச் செய்வதால் வெற்றி கிடைக்கும் நாள்.


மகரம்

அரைகுறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள்.


ரிஷபம்

பிற இனத்தவர்களால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், திட்டமிட்ட காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், போசன சுகமுண்டு.


சிம்மம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், செய்தொழிலில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.


விருச்சிகம்

பாடுபட்டதற்கேற்ப பலன் கிடைக்கும், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், புதிய முயற்சிகளில் ஆர்வம் கரட்டுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.


கும்பம்

மனதில் தோன்றுவதைச் செய்வீர்கள், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பயணங்களால் பலனுண்டு.


மிதுனம்

பக்குவமாகப் பேசி காரியங்கள் சாதிக்க வேண்டிய நாள், புதிய நட்பால் விரயங்கள் ஏற்படலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.


கன்னி

நண்பர்களுக்குள் நிலவிய கசப்புணர்வுகள் அகலும், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், சமார்த்தியமான பேச்சுக்களால் காரியம் சாதிக்க வேண்டிய நாள்.


தனுசு

இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.


மீனம்

பொதுநல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோஷம் கிடைக்கும் நாள், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர் பயிற்சியால் உன் மனதை உன்னால் பயன்படுத்த முடியும்.



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா



## நன்றிக்கடன்

பொன்னனுக்குக் குடும்பப் பொறுப்பு மிக அதிகம். நோயாளியான தந்தைக்கு வைத்தியம், தாய் விரும்பும் பட்டுச் சேலைகள், கல்யாணத்திற்கு நிற்கும் இரு தங்கைகள், வீட்டைச் செப்பனிடுதல் என்றெல் லாம் அவனுக்குப் பிரச்சினைகள்.

இவற்றை எல்லாம் சமாளிக்க அவனிடம் பணம் இல்லை. புத்திசாலி தான். ஆனால் பிறருக்கு உதவுவது தன் முதல் வேலை என்று அவன் கருதியதால் தன் வேலைகளை கவனிக்க முடியவில்லை.

பலர் அவனிடம் பணம் எப்படி எல்லாம் சம்பாதிக்கலாம் என்று சொல்லிப் பார்த்தார்கள். ஆனால் அவனது தந்தையோ "பொன்னா! நீ எவ்வளவு கஷ்டப் பட்டாலும்நேர்மையை மட்டும் கைவிட்டு விடாதே. இந்த நல்ல குணமே நிரந்தர மகிழ்ச்சியை அளிக்கும்" என்று அறிவுரை கூறினான்.

தன் ஊரில் இருந்தால் பணம் சம்பாதிக்க முடியாது என்று நினைத்து பொன்னன் பட்டணத்திற்குக் கிளம்பினான். வழியில் அவன் ஒரு காட்டைக் கடக்க வேண்டி இருந்தது. அவன் களைத்துப் போனதால் சற்று இளைப்பாற ஒரு மரத்தடியே தங்கினான்.

அந்த மரத்தின் மேல் ஒரு பிசாசு இருந்தது. அது தன்னோடு இருந்து பேச யாருமே இல்லையே என்று தவித்துக் கொண்டிருந்தது. அது பொன்னனைக் கண்டதும் சட்டெனக் குதித்து அவனருகே போய் நின்று "பயப்படாதே. எனக்கு ஏதாவது நல்ல விடயம் ஒன்றைக் கூறு. அது சுவாரசியமாக இருக்க வேண்டும். உனக்கு நிறையப் பணம் கொடுக்கிறேன்" என்றது.

பொன்னனும் பயப்படாமல் ஒரு பக்காத் திருடனின் கதையை அதற்குச் சொன்னான். அதுவும் ஆவலுடன் அந்தக் கதையைக் கேட்டு விட்டு "நீ சொன்ன கதை ரொம்ப நன்றாக இருக்கிறது. நீ இங்கேயே என்னோடு இருந்து விடு" என்றது.

பொன்னனும் "இருந்து விடலாம் ஆனால் எனக்கு சில பொறுப்புகள் இருக்கின்றனவே" என்றான். பிசாசு அவனிடம் ஒரு பை நிறையத் தங்க நாணயங்களைப் போட்டுக் கொடுத்து "நீ போய் விரைவில் உன் பொறுப்புகளை எல்லாம் முடித்து விட்டு வா" என்றது.

பொன்னன் பணப் பையோடு வீட்டிற்குச் சென்றான். தன் தந்தையின் வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்தான். தாய்க்குப் பட்டுப் புடவைகளை வாங்கிக் கொடுத்தான். வீட்டைச் செப்பனிட்டான். இதன் பின் அவனுக்குப் பிசாசின் நினைவு வரவே அவன் காட்டிற்குச் சென்றான். அங்கு அவன் இரண்டு நாட்கள் இருந்து பிசாசிற்கு ராஜா ராணி கதைகளைச் சொன்னான். அவற்றைப் பிசாசு வெகுவாக ரசித்தது. பொன்னன் தான் ஊருக்குப் போய்த் தன் தங்கைகளின் திருமணங்களைச் செய்து வைக்க வேண்டும். அதற்கு பணம் வேறு வேண்டும் என்றான்.

பிசாசும் "அதற்கெல்லாம் நான் பணம் கொடுக்கிறேன். நீ அவர்களது திருமணங்களை முடித்து விட்டு வந்து விடு" எனக் கூறி இரண்டு பைகள் நிறைய தங்க நாணயங்கள் போட்டுக் கொடுத்தது.

(தொடரும்)

# சிலப்பதிகாரம்

## மதுரமான வாழ்வு தேடி...




நடந்தது என்ன என்பதை அவர் அறியாதவர் அல்ல. ஆனாலும் தெரியாதது போல் நடந்து கொண்டார்.

'மதுரை செல்லும் வழியில் நிறைய காடுகளைக் கடந்து செல்ல வேண்டும். கொடி போல இருக்கும் இந்தப் பெண்ணைக் காத்து அழைத்துச் செல்வது சிரமமானது' என்று சிரித்தார் அடிகள் 'ஆனாலும் பயணத்தைத் தொடர்கிற உறுதி உங்களிடம் தெரிகிறது.'

உண்மைதானே. கோவலன் பதிலேதும் சொல்லாமல் அடிகள் சொல்வதைக் கேட்டுக் கொண்டு நின்றான்..

'ஆகவே, உங்களுக்கு வழித்துணையாக நானும் வருகிறேன். எனக்கும் மதுரை செல்லும் விருப்பம் நெடுங்காலமாகவே இருக்கிறது'

இதைக் கேட்டதும் கோவலன், கண்ணகி இருவருக்குமே மிகுந்த சந்தோசம் உண்டாயிற்று. 'எங்கள் பாக்கியம்! இதைக் கேட்கிறபோது தைரியமாகவும் நம்பிக்கையாகவும் இருக்கிறது' என்று ஒரே குரலில் சொன்னார்கள். விரைவில், அவர்கள் மூவரும் புறப்பட்டார்கள். பெரியவர்கள் நடையின் சிரமம் தெரியாமல் பேசிக் கொண்டு போவதில் வல்லவர்கள். கவுந்தி அடிகளும் நிறையப் பேசினார். அவர்கள் களைப்பைப் போக்க முயன்றார்.

'கோவலனே, சோலைகள் வழியாகச் செல்வது சுலபம் என்று நீ நினைக்கலாம்.'

'ஆம் அடிகளே. அதில் சிரமம் ஏதும் இருக்கிறதா?' 'குழந்தாய், சோலைகளில் கிழங்குகளைத் தோண்டி எடுத்ததால் உண்டான குழிகள் நிறைய இருக்கும்.'

'அதற்கென்ன, விலகிப் போனால் போயிற்று.'

'குழிகள் என்று தெரிந்தால் விலகிப் போகலாம் மகனே!' 'அது எப்படித் தெரியாமல் இருக்கும்?'

'அந்தக் குழிகளை சண்பகப் பூக்கள் உதிர்ந்து நிறைத்து மறைத்திருக்கும். பூதானே என்று காலை வைத்தால் நம்மைத் தடுமாறி விழச் செய்து விடும்' என்றார் அடிகள் 'வாழ்க்கையும் அப்படிதான் மகனே. துன்பங்கள் நம்மை நேராக அண்டுவதில்லை. இன்பத்தைப் போர்த்திக் கொண்டே அவை வருகின்றன.

எவ்வளவு பெரிய தத்துவத்தை இத்தனை எளிமையாகச் சொல்கிறார் என்று வியந்தாள் கண்ணகி.

'சரிதான், குழிகளில் கவனமாக இருப்போம் என்று நீ குனிந்து நடந்தாய் என்றால், பழுத்துத் தொங்கும் பலாப்பழங்கள் நெற்றி யில் இடிக்கும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 56

**1997 இன் பிற்பகுதியில் உக்ரைனில் உருவாக்கப்பட்ட ரஷ்ய சார்பு அரசியல் கட்சியான பிராந்தியங்களின் கட்சி (Party of Regions) பின்னர் 2006 மற்றும் 2014 க்கு இடையில் உக்ரைனின் மிகப்பெரிய கட்சியாக வளர்ந்தது. இக் கட்சியின் தலைவர் விக்டர் யானுகோவிச் 2006 ஆம் ஆண்டுத் தேர்தலில் 186 ஆசனங்களைக் கைப்பற்றி பிரதம மந்திரி ஆனார்.**

### உக்ரைனிய பாராளுமன்றத் தேர்தல்- 2006

ஆரஞ்சுப் புரட்சி மற்றும் 2004 டிசெம்பரில் நடந்த ஜனாதிபதித் தேர்தல்களைத் தொடர்ந்து, 2004 டிசெம்பரில் அரசியல் கூட்டணி, கூட்டணி அரசாங்கம் உருவாக்குதல் மற்றும் ஜனாதிபதியிடமிருந்து சில அதிகாரங்களை பாராளுமன்றத்திற்கு மாற்றுதல் போன்ற் நோக்குடன் உக்ரைனிய பாராளுமன்றம் உக்ரைன் அரசியலமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் (திருத்தங்களை) செய்தது. இம் மாற்றத்தின் முக்கிய குறிக்கோள் பாராளுமன்ற-ஜனாதிபதி ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதாகும் என்று கூறப்பட்டது.

அந்தத் திருத்தங்கள் ஜனவரி 1, 2006 இல் நடைமுறைக்கு வந்தன. புதிய அரசியலமைப்புத் திருத்தம் ஒற்றை உறுப்பினர்-தேர்தல் தொகுதிகளை நீக்கியது மற்றும் பல உறுப்பினர்களைக் கொண்ட விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை உருவாக்கியது. தேர்தல் சட்டம் மற்றும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையின்படி, அரசியல் கட்சிகள் அல்லது சுயேட்சைகள் பாராளுமன்றத்தில் இடங்களைப் பெறுவதற்கு குறைந்தபட்சம் 3% தேசிய வாக்குகளை பெற்றிருக்க வேண்டும்.

பாராளுமன்ற தேர்தல் சட்டம் 1991 முதல் 2015 வரை 4 முறை மாற்றப்பட்டது. 1998 க்கு முன் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒற்றை ஆசனத் தேர்தல் தொகுதிகளால் (ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திலிருந்தும்) தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1998 மற்றும் 2002 இல் பாதி உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவம் (பிரிவு வாக்கு) மூலமாகவும் மற்ற பாதி உறுப்பினர்கள் ஒற்றை ஆசனத் தேர்தல் தொகுதிகள் மூலமாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

**2006 மற்றும் 2007 பாராளுமன்றத் தேர்தல்களில், பாராளுமன்றத்தின் அனைத்து 450 உறுப்பினர்களும் மூடிய பட்டியல்களுடன் கூடிய கட்சி-பட்டியல் விகிதாசார பிரதிநிதித்துவத்தால் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.**

உக்ரைனிய பாராளுமன்றத் தேர்தல் 26 மார்ச் 2006 அன்று நடந்தது. தேர்தல் பிரச்சாரம் அதிகார பூர்வமாக 7 ஜூலை 2005 அன்று தொடங்கியது. நவம்பர் 26 மற்றும் 31 டிசெம்பர் 2005 க்கு இடையில் வேட்பாளர்களின் கட்சி பட்டியல்கள் உருவாக்கப்பட்டன.

இத் தேர்தலில் வாக்களிக்க 37,528,884 பேர் தகுதி பெற்றிருந்தனர். அதில் 25,352,380 பேர் வாக்களித்தனர். செல்லுபடியற்ற வாக்குகள் 490,595 ஆகும். வாக்களிப்பு வீதம் 67.55% ஆகும். எல்லா வேட்பாளர்களுக்கும் எதிராக வாக்களித்தவர்கள் 449,650 ஆகும்.

ஏப்ரல் 10 அன்று மத்திய தேர்தல் ஆணையம் (CVK) வாக்கு எண்ணிக்கையின் இறுதி முடிவுகளை அறிவித்தது. இத் தேர்தலில் போட்டியிட 45 கட்சிகளில், 5 கட்சிகள் மட்டுமே உறுப்பினர்கள் பெறுவதற்குத் தேவையான 3% தேர்தல் வரம்பை நிறைவேற்றின.

ஜனாதிபதி விக்டர் யுஷ்செங்கோவின் கட்சியான "எங்கள் உக்ரைன்" தேசிய வாக்குகளில் எதிர்பார்த்ததை விட 14% க்கும் குறைவாகப் பெற்றது. பிராந்தியங்களின் கட்சி மற்றும் யூலியா திமோஷென்கோவின் பிளாக் கட்சி ஆகியவற்றை விட குறைவான வாக்குகளைப் பெற்று மூன்றாவது இடத்தையே பெற்றது.

22% க்கும் அதிகமான வாக்காளர்கள் சிறு வேட்பாளர்களை (3% க்கும் குறைவான வாக்குகளைப் பெற்றவர்களை) ஆதரித்தனர். புதிய தேர்தல் முறையின் காரணமாக இவர்கள் பிரதிநிதித்துவத்தைப் பெறவில்லை.

"யூலியா திமோஷென்கோ பிளாக்" (Yulia Tymoshenko Bloc) என்பது 2001 ஆம் ஆண்டு முதல் யூலியா திமோஷென்கோவின் தலைமையிலான உக்ரைனில் உள்ள அரசியல் கட்சிகளின் கூட்டணியின் பெயராகும். இக்கட்சி 2006 ஆம் ஆண்டுத் தேர்தலில் 5,652,876 (22.3%) வாக்குகளைப் பெற்று 129 ஆசனங்களைக் கைப்பற்றியது.

நமது உக்ரைன் பிளாக் (Our Ukraine Bloc) என்பது நமது உக்ரைன் கட்சி உட்பட பல கட்சிகள் சேர்ந்த ஒரு தேர்தல் கூட்டணியாகும். இது (முன்னாள்) ஜனாதிபதி விக்டர் யுஷ்செங்கோவுடன் தொடர்புடைய கட்சியாகும். இக் கட்சி 2006 ஆம் ஆண்டுத் தேர்தலில் 3,539,140 (13.96%) வாக்குகளைப் பெற்று 81 ஆசனங்களைக் கைப்பற்றியது.

உக்ரைனின் சோசலிஸ்ட் கட்சி (Socialist Party of Ukraine) உக்ரைனில் உள்ள ஒரு சமூக ஜனநாயக அரசியல் கட்சியாகும்.

(தொடரும்)

# கொரோனா வைரஸினால் மூளையில் ஏற்படும் பாதிப்புக்கள் நீண்டகாலம் நீடிக்கும்

## ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் தகவல்

**(லண்டன்)**

**கொரோனா வைரஸால் மூளையில் ஏற்படும் பாதிப்புகள் நீண்டகாலம் நீடிக்கும் என பிரிட்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட ஓரிரு ஆண்டுகளுக்குப் பிறகு மூளை பாதிப்பு வெளிப்படுகிறது.

பல ஐரோப்பிய நாடுகளில் கொரோனா நோயால் பாதிக்கப்பட்ட 1.25 மில்லியன் நோயாளிகளை உள்ளடக்கிய ஆய்வுக்குப் பிறகு ஒக்ஸ்போர்ட் ஆராய்ச்சியாளர்கள் இதைக் கண்டுபிடித்துள்ளனர்.

கொரோனாவில்இருந்து மீண்ட நோயாளிகளுக்கு மூளையில் ஏற்படும் பாதிப்பு காரணமாக, சுயநினைவின்மை, டிமென்ஷியா போன்றவை ஏற்படுவதாக மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் விளக்குகின்றனர். (நி)

# சீனாவை வாட்டி வதைக்கும் வெப்பம்



(பீஜிங்)

காலநிலை மாற்றம் காரணமாக சீனாவில் 1961 ஆம் ஆண்டுக்கு பிறகு அதிக அளவிலான வெயில் தற்போது பதிவாகியுள்ளது. கடந்த புதன்கிழமை 40 டிகிரி செல்சியஸ்(104*F) வெப்பம் பதிவாகியுள்ளதாக அந்நாட்டு வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

கடந்த 2 மாதங்களாக நிலவும் வறட்சி காரணமாக சிச்சுவான் மற்றும் மத்திய சீன பகுதிகள் பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளன. அந்த பகுதியில் உள்ள கால்நடை, விவசாய பயிர்களுக்கு போதிய நீர் இல்லாததால் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. கால்நடைகளை தற்காலிகமாக நீர் உள்ள பகுதிகளுக்கு மாற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெயிலின் தாக்கம் காரணமாக வீடு, அலுவலங்களில் ஏசி பயன்பாடு அதிகரித்துள்ளதால் மின் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. வறட்சி காரணமாக நீர்மின் நிலையங்களில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டுள்ளது.

குறிப்பாக சீனாவின் சிச்சுவான் மாகாணத்தில் ஆகஸ்ட் 21 வரை அனைத்து தொழிறசாலைகளிலும் உற்பத்தியை நிறுத்திவிட்டு விடுமுறை அறிவிக்க வேண்டும் என அந்நாட்டு அரசு உத்தரவிட்டுள்ளது.

இதனால், அந்த மாகாணத்தில் சுமார் 6 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால், அந்த மக்கள் குளிர்ச்சியான பகுதியை நோக்கி நகர ஆரம்பித்துள்ளனர்.

கடும் வெயிலால் பாதிக்கப்பட்ட சீன மக்கள் குடிநீருக்காகவே அல்லோலப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், தீயணைப்பு நிலைய வாகனங்கள் மற்றும் லொறிகள் மூலம் தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. வறட்சிகாரணமாக சுமார் 40 ஆயிரம் ஹெக்ரேயர் பரப்பளவிலான விவசாய அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

மேற்கு பசிபிக் துணை வெப்ப மண்டலத்தில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக ஆசியாவின் பெரும் பகுதி தீவிர வெப்ப பாதிப்பிற்கு ஆளாகலாம் என்று அவுஸ்திரேலிய அறிவியல் ஆராய்ச்சி நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. (நி)

# பிரபல இலக்கிய பேச்சாளர் நெல்லை கண்ணன் காலமானார்

(சென்னை)

பிரபல தமிழ் இலக்கிய பேச்சாளரும், பட்டிமன்ற நடுவருமான 'தமிழ்க்கடல்' நெல்லை கண்ணன் நேற்று முன்தினம் காலமானார்.

குன்றக்குடி அடிகளாருடன் இணைந்து பட்டிமன்றங்களை அறிவார்ந்த விவாத தளங்களாக மாற்றியவர் நெல்லை கண்ணன்.

காங்கிரஸ் கட்சியில் பிரபல பேச்சாளராக விளங்கிய இவர், இலக்கியம் மட்டுமல்லாமல், ஆன்மீக சொற்பொழிவாளர் என பன்முகம் கொண்டவர். இவர் அனைவராலும் 'தமிழ்க்கடல்' என்று அழைக்கப்பட்டார்

77 வயதான இவர் வயது முதிர் வின் காரணமாகவும் நோய் தாக்கத்தின் காரணமாகவும் கடந்த சில நாட்களாக பாதிக் [illegible] (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பணவீக்கம் குறையும் சாத்தியம்

## மத்திய வங்கி ஆளுநர் தகவல்



(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபை கடந்த காலங்களில் மேற்கொண்ட தீர்மானங்கள் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் சாதகமான முடிவுகள் காணப்படுவதாக மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி. நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.

அந்த நிலையில் எதிர்காலத்தில் பணவீக்கம் குறையும் என நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். அந்நியச்செலாவணி பற்றாக்குறை ஓரளவு குறைந்துள்ளதுடன் வங்கி முறைமையில் அந்நியச்செலாவணி மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயங்களைத் தெரிவித்தார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், மத்திய வங்கி நாணயச் சபை தற்போதைய வட்டி வீதங்களை அதே மட்டத்தில் பேணுவதற்கு தீர்மானித்துள்ளது.

இதன்படி நிலையான வைப்புகளுக்கு 14.5 சதவீதமும் நிலையான கடன்களுக்கு 15.5 சதவீதமும் வட்டி விகிதங்களை பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய உள்ளூர், பூகோள மற்றும் எதிர்பார்க்கப்படும் மேக்ரோ பொருளாதாரப் போக்குகளை கவனமாகக் கருத்திற்கொண்டு மத்திய வங்கியின் நாணயச் சபை இந்த முடிவை எடுத்துள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் தெரிவித்தார். (நி)

# கட்டுநாயக்கவில் சிக்கிய 10 கிலோ தங்க பிஸ்கட்

(கொழும்பு)

இலங்கைக்குள் 200 மில்லியன் பெறுமதியான சுமார் 10 கிலோ கிராம் தங்க பிஸ்கட்டுகளை கடத்த முற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் விமானப் பயணி மற்றும் கட்டுநாயக்க பெண் ஊழியர் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

துபாயில் இருந்து EK650 என்ற விமானத்தில் பயணித்த போதே விமான நிலையத்தில் வைத்து நேற்று இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து சுமார் 80 தங்க பிஸ்கட்டுகளை அதிகாரிகள் கைப்பற்றியுள்ள நிலையில், போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி)

# இலங்கைக்கு மீண்டும் நன்கொடை வழங்கும் அவுஸ்திரேலியா

(கொழும்பு)

இலங்கைக்கான அவசர உதவித் தொகையை 75 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களாக அதிகரிக்க அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி இலங்கைக்கு மேலதிகமாக 25 மில்லியன் அவுஸ்திரேலிய டொலர்களை நன்கொடையாக வழங்க அவுஸ்திரேலிய அரசாங்கம் தீர்மானித்துள்ளது. (நி)

# இலங்கையின் தேசிய விலங்கில் இருந்து மரஅணிலை நீக்க தீர்மானம்

## விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர

(கொழும்பு)

மர அணிலை தேசிய விலங்கு பட்டியலில் இருந்து நீக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தேசிய விலங்காக விளங்கும் மர அணிலை பல விவசாய அமைப்புகள் தேசிய விலங்கு பட்டியலில் இருந்து நீக்குமாறு பரிந்துரைப்பதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

கிரிஸ்லட் மரஅணில் பயிர்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாக இருப்பதாகவும் இது தேசிய விலங்கு என்பதால் இதை எதிர்த்து எதுவும் செய்ய முடியாது என்றும் விவசாயிகள் கூறுகின்றனர்.

இந்த விடயத்தில் அரசாங்கம் கவனமுடன் இருப்பதாகவும் கிரிஸ்லட் மர அணிலை மாற்ற திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் அமரவீர தெரிவித்துள்ளார்.

தேசிய பாரம்பரியங்கள் பற்றிய ஆலோசனைக் குழு உட்பட அனைத்து தரப்பினரிடம் இவ்விடயம் குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# கோட்டா இலங்கை வருவது குறித்து எனக்கு எதுவும் தெரியாது

## கைவிரித்தார் ரணில்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு திரும்புவது குறித்து தனக்கு தெரியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்துக்கு வழங்கியுள்ள விசேட செவ்வியின் போதே அவர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அடுத்த வாரம் இலங்கை திரும்பவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, ஜனாதிபதியுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்பாக இலங்கைக்கு வருவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கோரியிருந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)


குருவே துணை

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



**வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய மனவளக்கலை யோகா பயிற்சிகள்**

யாழ்ப்பாண்ம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவிலில் ஆளுமை திறனூக்கப் பயிற்சிகள் இந்த ஆண்டு முழுவதும் இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டு இருப்பதால் இந்த அரியவாய்ப்பை பயன்படுத்திக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- உடல் நலத்திற்கு → எளியமுறை உடற்பயிற்சிகள்
- உயிர் வளத்திற்கு → சித்தர்களின் வழிவந்த காயகல்ப பயிற்சி
- மன அமைதிக்கு → தியானப் பயிற்சிகள்
- அறிவு வல்லமைக்கு → அகத்தாய்வு பயிற்சிகள்
- உறவுகள் மேம்பட → தற்சோதனைப் பயிற்சிகள்

காலம் :- 20.08.2022 சனிக்கிழமை தொடக்கம் 26.08.2022 வெள்ளிக்கிழமை வரை

நேரம் :- மாலை 5.00 தொடக்கம் 7.00 மணிவரை

பயிற்சிகளை வழங்குபவர்கள்:- துணைப்பேராசிரியர் அருள்நிதி த.நந்தகுமரன் மற்றும் துணைப்பேராசிரியர் அருள்நிதி ந.ஜெயகிருஷ்ணா அவர்கள்

(C-4759)

தொடர்புகளுக்கு:- யாழ்ப்பாணம் அறிவுத்திருக்கோவில்

இல.81, பிறவுண் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்ப்பாணம்.

தொ.இல:- 021 222 2772, 076 857 1395, 077 123 5646, 071 440 3268, 077 736 8745



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 29 சூரி 12 செவ் 2 இல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: AL பிரான்ஸ் PR இல்லை<br>எதிர்பார்ப்பு: நற்பண்புள்ள பெண்<br>தொ.இ: B/10108 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 3<br>கி.பா: 63 ½ சூரி 6 செவ் 7 இல்<br>உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: BBA பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர்<br>எதிர்பார்ப்பு: உள்நாட்டு படித்த ஆண்<br>தொ.இ:G/10463 |
| பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: திருகோணம்<br>கி.பா: 32 சூரி 11 செவ் 10 இல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L சொந்தக்கடை<br>எதிர்பார்ப்பு: காரைநகர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10110 | பிறப்பு: 1996 இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம் 4<br>கி.பா: 15 ½ சூரி, செவ் 2 இல்<br>உயரம்: 153 cm<br>தகைமை/தொழில்: BA Following<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்<br>தொ.இ: G/10465 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 3<br>கி.பா: 11 ½ சூரி 9 செவ் 2 இல்<br>தகைமை/தொழில்: மின்சாரம் சம்மந்தப்பட்ட வேலை<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10113 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: சூரி 1 செவ் 3 இல் உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: L.L.B சட்டத்தரணி (லண்டன்)<br>எதிர்பார்ப்பு: பட்டதாரி லண்டனில் பிறந்தவர் விரும்பத்தக்கது<br>தொ.இ:G/10472 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: சூரி 10 செவ் 11 இல்<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: BSc ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/10122 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 20 ½ சூரி 5 செவ் 7 இல்<br>உயரம்: 163 cm<br>தகைமை/தொழில்: A/L (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: சாதாரண படித்த பெண்<br>தொ.இ:G/10485 |

கல்யாணமாலை

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

தொடர்பு:- 021 720 1005, 021 221 5434

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை

விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை

பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> சிறிய விஷயத்தில் நியாயம் தவறுபவன் பெரிய விஷயத்திலும் தொடருவான்.
>
> – இயேசுநாதர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வாகனப் புகைப் பரிசோதனையை உடனடியாக நிறுத்த வேண்டும்

ஒரு திட்டத்தை அமுல்படுத்துவதாக இருந்தால் அதனால் மக்கள் சமூகத்துக்கு ஏற்படக் கூடிய நன்மை. அதன் நிலைத்ததன்மை, அதன் மீதான மேற்பார்வை என இன்னோரன்ன விடயங்கள் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும்.

இதைவிடுத்து நினைத்த மாத்திரத்தில் சில திட்டங்களை அமுலாக்கிவிட அது மக்கள் சமூகத்துக்கு மிகப்பெரும் தலையிடியாக மாறிவிடுகிறது.

இதற்கு வாகனப் புகைப்பரிசோதனை மிகச் சிறந்த உதாரணமாகும்.

வாகனங்களில் இருந்து வெளியேறுகின்ற புகை சுற்றுச்சூழலைப் பாதித்து வருவது தெரிந்த விடயமே.

அதிலும் அளவு கடந்து வாகனங்கள் புகையை வெளியிடும்போது அதனால் சுற்றாடல் மாசடைகிறது.

இந்த நிலையில் வாகனங்கள் வெளிவிடுகின்ற புகையை ஒரு நியமப் பரிசோதனைக்கு உட்படுத்தி அதற்குச் சான்றிதழ் பெற வேண்டும் என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது.

ஆரம்பத்தில் அந்த நடைமுறை ஓரளவுக்கு வெற்றியளித்ததாயினும் இப்போது வாகனப் புகைப் பரிசோதனை நிலையங்கள் இலஞ்சம் பெறுகின்ற நிறுவனங்களாக மாறிவிட்டன.

இதில் ஒரு சில நிறுவனங்கள் விதிவிலக்குப் பெறுவனவாக இருப்பதை நாம் நிராகரிக்கவில்லை.

ஆனால் வாகனப் புகைப் பரிசோதனை செய்கின்ற பெரும்பாலான இடங்களில் இலஞ்சம் தலை விரித்தாடுகிறது.

அதாவது இலஞ்சத்தைப் பெற்றுக் கொண்டு புகைப் பரிசோதனைச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

எனினும் குறித்த வாகனங்கள் வீதிகளில் பயணிக்கையில் வெளிவிடுகின்ற புகையைப் பார்க்கும்போது வாகனப் புகைப் பரிசோதனை நடவடிக்கை படுதோல்வி கண்டுவிட்டதென்பது தெட்டத்தெளிவாகிறது.

தவிர, இலஞ்சத்தைப் பெற்றுக்கொள்ளும் நோக்கில் புகைப்பரிசோதனையில் சித்தியின்மை ஏற்பட்டுள்ளதாகச் சான்றிதழ் வழங்குவதும் பின்னர் அதனைச் சாட்டாக வைத்து இலஞ்சம் பெற்று புகைப்பரிசோதனையில் சித்தியடைந்ததான சான்றிதழை வழங்குவதுமான கபடங்கள் சர்வசாதாரணமாக நடந்தாகின்றன.

அதிலும் இந்த இலஞ்சக் கொடுமை யாழ்ப்பாணத்தில் உச்சமென்றே கூறவேண்டும்.

அதாவது புகைப்பரிசோதனை மேற்கொள்வதற்குரிய நிறுவனங்களில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் கூட்டு முயற்சியாக இந்த இலஞ்ச ஊழல்களில் ஈடுபடுகின்றனர்.

தவிர, வாகனப் புகைப் பரிசோதனை செய்கின்ற நிறுவனங்களில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் மேற்பார்வையோ அன்றி மோட்டார் போக்குவரத்து திணைக்கள ஊழியர்களின் பிரசன்னமோ இருப்பதில்லை.

ஆக, வாகனப் புகைப் பரிசோதனை நிலையங்கள் இலஞ்சம் பெறுவதற்கான நிறுவனங்கள் போல இருப்பதை நடைமுறையில் அவதானிக்க முடிகிறது.

ஆகவே எந்தப் பிரயோசனமுமற்ற வாகனப் புகைப் பரிசோதன்ன முறையை உடனடியாக நிறுத்தி மாற்றுவழி பற்றிச் சிந்திப்பது சம்பந்தப்பட்ட திணைக்களங்களின் தலையாய கடமையாகும்.

## வடக்கில் போதைப்பொருளை கட்டுப்படுத்த
# தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று கூடி நடவடிக்கை எடுக்க வேண்டும்
## கலாநிதி.ஆறு.திருமுருகன் அவசர கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**யாழ். குடாநாட்டில் சமீபத்தில் போதைவஸ்து பாவனை மிக முக்கியப் பிரச்சினையாக காணப்படுகிறது. கலை, பண்பாடு, பாரம்பரியத்திற்கு பேர் போன யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் பாவனை தொடர்ந்து கொண்டு இருப்பது மிகக் கவலையான விடயம் என செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன் தெரிவித்தார்.**

யாழில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் பிரதிநிதிகளோ, கல்விமான்களோ, சமூகப் பொறுப்புணர்வு உடையவர்களோ சரியான முறையில் அக்கறை எடுக்காத காரணத்தினால் வடக்கில் இது அதிகரித்து செல்கின்றது.

அதேவேளை போருக்கு பிற்பாடு பல இளைய தலைமுறைகளை இழந்து இருக்கின்ற இந்த நிலையிலே தொடர்ந்து இளைய தலைமுறைகள் அநியாயமாக போதைவஸ்துக்கு ஆளாகி மரணத்தைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த போதைவஸ்து பாவனையானது இன்று கட்டுக்கு அடங்காமல் இளைய தலைமுறையினரிடத்தே அதிகரித்து செல்கின்றது.

இலங்கையில் போதைவஸ்து பாவனையினை முழுமையாக தடுத்து நிறுத்துவதற்கு வழிகளை கையாளாவிட்டால் மிகப் பெரிய ஆபத்தை இந்த நாடு சந்திக்கும். சமூகத்தின் முக்கியஸ்தர்கள், பொலிஸ் பொறுப்பதிகாரிகள், பிரதேச செயலகங்கள், மக்கள் பிரதிநிதிகளான பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்த விடயங்கள் தொடர்பாக ஒன்றுகூடி இதுவரை ஒரு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காத காரணத்தினால் எங்கள் சமுதாயம் மிக கேவலமான நிலைக்கு வந்துவிட்டது.

வடக்கில் மட்டுமல்ல மலையகத்திலும் இந்த பிரச்சினைகள் காணப்படுகின்றன. இதில் கூடுதலாக தமிழ் இளைஞர்களே பாதிக்கப்படுகிறார்கள். இதற்கு தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு அவசரமான தீர்மானத்தினை ஒற்றுமையாக ஒன்றுகூடி இதனை தடுப்பதற்கு என்ன வழி என இதுவரைக்கும் சரியாக ஆராய்ந்ததில்லை.

வடக்கிலே மிக முக்கியமான ஒரு கூட்டத்தினை நடத்தி தமிழர்களுடைய பகுதியிலே அதிகமான அளவில் போதைவஸ்து பாவனை நிலவுவதற்கான காரணங்கள் என்ன என கண்டறிந்து அதைத் தடுப்பதற்கான சரியான வழியினை பின்பற்ற வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-104)

# வடமாகாணத்தில் டெங்கு நோய் தாக்கம் அதிகரிப்பு
## நடப்பாண்டில் இதுவரை 8 பேர் மரணம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் இவ்வாண்டின் இது வரையான காலப்பகுதியில் 8 பேர் பலியாகியுள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாணத்தில் 2,772 பேர் டெங்கு நோய்த் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளனர். இதில் யாழ்ப்பாணத்தில் 2,387 பேர் நோய்த் தாக்கத்திற்குள்ளாகியுள்ளனர்.

இது கடந்த இரண்டு ஆண்டுகளை விடவும் அதிகரித்த நிலையே காணப்படுகிறது.

இவ்வாண்டில் இது வரையான காலத்தில் 8 உயிரிழப்புக்கள் நிகழ்ந்துள்ளது. இவ் 8 உயிரிழப்புக்களும் யாழ். மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

# அரச அதிகாரிகளின் வெளிநாட்டு வேலைவாய்ப்பை விரிவுபடுத்த அவதானம்
## ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவிப்பு

அரச அதிகாரிகளின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் பரிந்துரை திட்டத்தை விரிவுப்படுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்படி அரசதுறை பணியாளர்களை உற்பத்தி ரீதியான பணிகளில் ஈடுபடுத்தல்,அதன் மூலம் அந்நிய செலாவணியை அதிகரித்தல் குறித்த திட்டங்கள் ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக சுற்றறிக்கை திருத்தத்தின்படி, வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெறும் அரச பணியாளர்களுக்கு, குடியுரிமை இல்லாத வெளிநாட்டு நாணயக் கணக்கு அல்லது ரூபாய் கணக்கில் பணத்தை அனுப்ப முறையான ஒப்புதல் வழங்கப்படவுள்ளது.

இதன் மூலம், மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது பணத்தை இலங்கைக்கு அனுப்புவதை உறுதிப்படுத்துவதுடன், வேலைவாய்ப்புக்கு விண்ணப்பித்த அரசாங்க ஊழியர்களுக்கான வெளிநாட்டு வேலை வாய்ப்புக்களை விரைவாக கண்டறிவதற்கும் வழியேற்படுத்தப்படவுள்ளது.

அதேநேரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்குச் செல்லும் அரச ஊழியர்களுக்கு விடுப்பு பெறுவதற்கான விண்ணப்பங்களை அனுப்புவதில் பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் குறித்தும் ஆராயப்பட்டுள்ளது.

அத்துடன் வங்கிக் கடன்கள் மற்றும் ஓய்வூதியப் பங்களிப்புகளை பெற்றுக் கொடுக்கப்படுவதை உறுதிப்படுத்தும் முறைமையொன்றை இந்த மாதம் 31ஆம் திகதிக்கு முன்னர் தயாரித்து நடைமுறைப் படுத்துமாறும் ஜனாதிபதியின் செயலாளர் பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் ஓய்வூதியப் பணிப்பாளர் ஆகியோருக்கு பணிப்புரை விடுத்துள்ளார். (ம-7)

# சுன்னாகம் சிவபூதராயர் அலங்கார உற்சவம்

(குப்பிழான்)

யாழ். சுன்னாகம் தெற்கு ஸ்ரீ சிவபூதராயர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகளுடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்தும் பத்துத்தினங்கள் இவ்வாலய அலங்கார உற்சவம் சிறப்பாக இடம்பெற உள்ளது.

இவ்வாலய அலங்கார உற்சவத்தில் எதிர்வரும் 29 ஆம் திக்தி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு சங்காபிஷேக கிரியைகள் ஆரம்பமாகி, அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து வசந்த மண்டப பூசையும், சிவபூத்ராயர் வீதி உலாவரும் திருக்காட்சியும் இடம்பெறும் என மேற்படி ஆலயத் தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (4-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள் தட்டுப்பாட்டால் ஓய்ந்திருந்த மணல் கொள்ளை மீண்டும் தலைதூக்கியது!

**(தருமபுரம்)**
**அண்மைய நாட்களில் நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் தட்டுப்பாடு, எரிபொருள் இன்மை காரணமாக மணல் கொள்ளைகள் ஓய்ந்திருந்தன. தற்போது மீண்டும் எரிபொருள் சீரானதுடன் மணல் கொள்ளைகள் முன்பு போல அதிகரித்துள்ளன.**




கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கண்டாவளை, புளியம் பொக்கணை,தருமபுரம், உழவனூர், நெத்தலியாறு, கல்மடு என பல பகுதிகளில் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மணல் அகழ்வு ஓய்ந்திருந்தது. தற்பொழுது எரிபொருள் வழங்கப்பட்டு வரும் நிலையில் மணல் அகழ்வு பல பகுதிகளில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகிறது.

அந்த வகையில் விவசாய பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்படும் பல வயல் நிலங்களில் அத்துமீறி சட்டவிரோதமான முறையில் மணல் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

வயல் நிலங்கள் இப்படி அழிவடைந்து வந்தால் இனி வரும் காலங்களில் விவசாய செய்கை மேற்கொள்வதில் பல சிரமங்களை விவசாயிகள் எதிர்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்தனர்.

எனவே, இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்குமாறு அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (4-316)

## அனுமதிப்பத்திரம் இன்றி மாடுகளை ஏற்றிச் சென்றவர் கைது



(தருமபுரம்)
தருமபுர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம்பொக்கணை பகுதியிலிருந்து கிளிநொச்சி நோக்கி அனுமதிப் பத்திரமின்றி நான்கு மாடுகளை ஏற்றிச் சென்ற சிறியரக லொறி சாரதி தருமபுர பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சாரதியை பொலிஸார் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவித்தனர்.

அதேவேளை எதிர்வரும் 25 ஆம் திகதி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. அதுவரையான காலப்பகுதியில் கால்நடைகளை தருமபுரம் பொலிஸாரே பராமரித்து வருவர் என பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (4-316)


## இலங்கை திறந்த பல்கலைக்கழக புதிய கட்டடத் திறப்பு விழா



(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்துக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள கல்வி அமைச்சர் கலாநிதி.சுசில் பிரேமஜயந்த யாழ்ப்பாணம் திறந்த பல்கலைக்கழக பிராந்திய கற்கை நிலைய கட்டடத் தொகுதியை நேற்று வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

மேற்படி கட்டடம் அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட நிதி மற்றும் மாணவர்களின் நிதிப் பங்களிப்புடனும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. குறித்த நிகழ்வில் கல்வி அமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் சம்பத் அமரதுங்க, இலங்கை திறந்த பல்கலைக் கழகத் துணை வேந்தர் பேராசிரியர் பீ.எம்.சி. திலகரத்ன, யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் ஆகியோர் கலந்து கொண்டனர். (4-18-104)

## வெடிபொருட்களுடன் இத்தாவிலில் ஒருவர் கைது



(தருமபுரம்)
பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இத்தாவில் பகுதியில் நேற்று முன்தினம் வெடி பொருட்களுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பளை பிரதேச இத்தாவில் பகுதியில் நபர் ஒருவரின் வீட்டில் வெடிபொருட்கள் வைத்திருப்பதாக பளை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியதக வலையடுத்து குறித்த வீடு சுற்றி வளைக்கப்பட்டது.

பின் குறித்த நபரின் வீட்டில் தேடுதலில் ஈடுபட்ட போது 910 கிராம் வெடிமருந்து, கழற்றிய நிலையில் இரண்டு மோட்டார் குண்டும், நல்ல நிலையில் மூன்று மோட்டார் குண்டுகளும் கைப்பற்றப்பட்டன.

குறித்த நபரை கைது செய்த பளை பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் முன்னிலையில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொண்டனர். (4-100-316)



இமையாணன் அ.த.க. பாடசாலையின் பழைய மாணவரும் சமூக சேவையாளரும் ஜேர்மன் நாட்டில் வசிப்பவருமான சின்னையா இராஜரட்ணத்தால் இமையாணன் அ.த.க. பாடசாலைக்கு நேற்று முன்தினம் 8 கணினிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (படம்: மகாலிங்கம்)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 420 | 350 | 350 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 470 | 500 |
| தக்காளி | 400 | 400 | 450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 240 |
| கோவா | 450 | 380 | 450 | 450 |
| கரட் | 300 | 340 | 380 | 400 |
| பூசணி | 100 | 120 | 120 | 120 |
| புடோல் | 100 | 100 | 120 | 200 |
| வாழைக்காய் | 160 | 160 | 120 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 300 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 200 | 180 | 180 | 180 |
| பாகற்காய் | 350 | 500 | 500 | 400 |
| வெண்டிக்காய் | 100 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 200 | 250 |
| பயற்றங்காய் | 180 | 150 | 120 | 200 |
| லீக்ஸ் | 300 | 250 | 280 | 300 |
| பீற்றூட் | 120 | 150 | 160 | 200 |
| கறிமிளகாய் | 600 | 600 | 600 | 800 |
| முருங்கைக்காய் | 500 | 500 | 400 | 400 |
| போஞ்சி | 600 | 650 | 600 | 700 |
| கத்தரிதம்புள்ள | 200 | 250 | — | 400 |
| கீரை - 1 பிடி | 140 | 100 | 80 | 120 |
| தேசிக்காய் | 300 | 250 | 150 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 40-80 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 300 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 250 | 300 | 300 | 400 |
| முள்ளங்கி | 80 | 100 | 140 | 250 |
| பொன்னாங்கண்ணி | 120 | 90 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 100 | 80 | 80 | 120 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு...

சந்திப்பு நேற்று ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தளபதியாகவும் பதவியேற்றதன் பின்னர் மரியாதை நிமிர்த்தம் இந்தச் சந்திப்புகள் இடம்பெற்றன.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன (ஓய்வுபெற்ற), பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா, இராணுவத் தளபதி லுதினன் ஜெனரல் விக்கும் லியனகே, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன, வான் படைத் தளபதி எயார் மார்ஷல் சுதர்சன பத்திரன, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் என்.ஆர். லமாஹேவாகே, இலங்கை கடலோர பாதுகாப்புப் படையின் பணிப்பாளர் ஜெனரல் ரியர் அட்மிரல் அனுர ஏக்கநாயக்க ஆகியோர் ஜனாதிபதியை மரியாதை நிமிர்த்தம் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதிக்கு நினைவுப்பரிசுகளையும் வழங்கி வைத்தனர். (ம-7)

## 6 மரணம்...

60க்கும் உட்பட்ட வயதுடைய ஆண் ஒருவரும் 60 வயதுக்கு மேற்பட்ட 4 பெண்களும் உள்ளடங்கியுள்ளதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## மின்சார நெருக்...

பங்களில் மின்துண்டிப்பை மேற்கொள்ள நேரிடும் என இலங்கை மின்சார பொறியியலாளர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

அரசாங்கம் மற்றும் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து இதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என இலங்கை மின்சார பொறியியலாளர்கள் சங்கத்தின் தலைவர் சௌமிய குமாரவடு தெரிவித்துள்ளார். (ம-7)

## 12 எரிபொருள்...

விஜேசேகர தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவின் மீளாய்வுக் கூட்டத்தில் QR குறியீட்டு முறையின் அமுலாக்கம் குறித்து மதிப்பீடு செய்யப்பட்டதில் இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதன்படி, எரிபொருள் நிரப்பு நிலையங்களை தொடர்ச்சியாகக் கண்காணிக்கவும் பொதுமக்கள் அனுப்பும் முறைப்பாடுகளை பொலிஸ் நிலையங்களுக்கு சமர்ப்பிக்கவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். (ம-7)

## நாட்டை மீண்டும்...

"வரப்பிரசாதங்கள் மற்றும் சலுகைகளைப் பெறுவதற்குப் பதிலாக பிரயோக ரீதியாக தலையிட்டு நாட்டைக் கட்டியெழுப்புவதே எனது நோக்கமாகும்.

அரசு கொண்டு வரும் நேர்மறையான, முற்போக்கான முன்மொழிவுகளை ஆதரிக்கும் வகையில் ஒரு வேலைத்திட்டம் வடிவமைக்கப்படும்.

ஒருபோதும் மக்களின் எண்ணங்களுக்கும், விருப்பங்களுக்கும் துரோகம் இழைக்கமாட்டேன்.

அமைச்சுப் பதவிகளைப் பெற்றுக்கொண்டு கையிருப்பில் எஞ்சியுள்ள டொலர்களை அழிக்கும் செயற்பாட்டுக்கு ஒருபோதும் பங்களிக்கப் போவதில்லை.

தற்போது அனைத்துத் துறைகளிலும் வீழ்ச்சியடைந்துள்ள நாட்டைக் கட்டியெழுப்பப் பதவிகள் அவசியமில்லை" என்றார். (ம-7)

## பயங்கரவாத...

யாகியுள்ள செய்திகள் மிகுந்த கவலையளிப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

தெற்காசிய பிராந்திய காரியாலயம் தமது உத்தியோகபூர்வ டுவிட்டர் தளத்தில் இதனைத் தெரிவித்துள்ளது.

குடியியல் உரிமைகளுக்காக போராடுபவர்களுக்கு எதிராக கொடூரமான பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமான, பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) பயன்படுத்த வேண்டாம் என்று இலங்கை அரசாங்கத்தை சர்வதேச மன்னிப்புச் சபை வலியுறுத்தியுள்ளது.

அதற்குப் பதிலாக பயங்கரவாத தடைச்சட்டத்தை இரத்து செய்ய அரசு எதிர்பார்க்க வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

போரா[illegible] சையாக [illegible] மற்றும்

பயங்கரவாதம் அல்லாத அவர்களின் நடவடிக்கைகளால் நியாயப்படுத்தப்படாத கடுமையான குற்றச்சாட்டுக்களை சுமத்துவது சர்வதேச சட்டத்திற்கு எதிரானது என்றும் சர்வதேச மன்னிப்புச் சபை மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## பயங்கரவாத சட்டம்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினருக்கும் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிற்குமான கலந்துரையாடல் நேற்று மதியம் ஒரு மணியளவில் இடம்பெற்றது. இதன்பொழுது கருத்து தெரிவித்த யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் ஜெல்சின்,

எங்களுடைய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் மற்றும் செயலாளராக இருந்த பபில்ராஜ் மற்றும் திவாகர் ஆகிய இரு மாணவர்களும் கடந்த 2019ஆம் ஆண்டு பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய அலுவலகத்தில் தமீழீழ விடுதலைப்புலிகளை பிரதிபலிக்கும் புகைப்படங்கள் இருந்தமைக்காக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு இன்றும் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறியும் அவர்களுக்கான வழக்கு தொடர்ந்துகொண்டிருக்கின்றது.

ஆகவே மாணவர்கள், ஒன்றியத்தின் பிரதிநிதிகளாக அவர்களுடைய வழக்கு தொடரப்பட்டுள்ளது. விரைவில் அவர்களை விடுதலை செய்யுமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்தார்.

இதனையடுத்து கருத்து தெரிவித்த கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,

மாணவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் பலர் இந்த சட்டத்தின் மூலம் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

இந்தச் சட்டம் விரைவில் நீக்கப்பட உள்ளது. குறித்த இரு மாணவர்களது வழக்கு குறித்து நான் சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டு விரைவில் அவர்களை விடுவிப்பதற்கான ஏற்பாடுகளை கருத்திற் கொள்கின்றேன்.

ஒரு வழக்கறிஞராக பல்கலைக்கழக மாணவர்களின் நீதிசார் [illegible] வழக்குகளில் ஆஜராகியுள்ளேன்.

வெகுவிரைவில் இச்சட்டம் நீக்கப்படும் என தெரிவித்தார். மேலும் மாணவர்களின் வழக்கு எண் விபரங்களையும் பெற்றுக்கொண்டார்.

இதன்போது பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிபற்குணராஜா, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கையின்...

தூதுவரிடம் எதிர்க்கட்சித் தலைவர் கலந்துரையாடியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவை நேற்று அமெரிக்க தூதுவர் ஜூலி சங் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது, இலங்கையின் இன்றைய பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நிலைமை குறித்து கலந்துரையாடப்பட்டது.

அத்துடன் இலங்கை மக்களின் அவசர மற்றும் நீண்டகாலத் தேவைகளை நிவர்த்தி செய்வதற்கு இலங்கையின் அனைத்துத் துறைகளும் எவ்வாறு ஒன்றிணைந்து செயற்பட முடியும் என்பதற்கான கருத்துக்களும் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக அமெரிக்க தூதுவர் தமது டுவிட்டரில் தெரிவித்துள்ளார். (ம-7)


தன நிதானய
திகதி - 2022.08.19
சீட்டிழுப்பு இலக்கம் - 882
W 29 56 61 66

மஹஜன சம்பத
திகதி 2022/08/19
சீட்டிழுப்பு இலக்கம் 4852
M 2 4 8 4 7 6

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2022.08.19
சீட்டிழுப்பு இலக்கம் 161
சிம்மம் 07 16 43 58 சிம்மம்

மெகா பவர்
திகதி 19/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1200
R 20 11 19 41 77

கொவிசெத
திகதி 2022.08.19
சீட்டிழுப்பு இலக்கம் 3094
M 15 23 42 58
தேசிய லொத்தர் சபை

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/08/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1311
கடகம் 4 0 0 1 1 2
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1827
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2022.08.19
தினம் வெள்ளிக்கிழமை
P 10 29 45 51
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,379,200/-

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.08.19
சீட்டிழுப்பு இல : 3988
வர்ணம் : செம்மஞ்சள்
ரூ. 3,069,240/-
வெற்றி இலக்கங்கள்
20 37 53 56 T

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 211
சீட்டிழுப்பு திகதி 2022.08.19
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
07 18 28
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,154,120/-

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,145,247.40
திகதி 2022-08-19
வெற்றி வாரம் 3539
வர்ணம் நீலம்
வெற்றி இலக்கங்கள்
38 46 57 62
மிதுனம்
ரூ. 7,251,040/-

25
G 40 30 53 54 57
சீட்டிழுப்பு வாரம் 1003
2022.08.19
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 254,697,589/-
011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி
ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1653
சீட்டிழுப்பு திகதி : 2022.08.19
ரூ. 3,444,480/-
வெற்றி இலக்கங்கள்
28 48 63 65 X


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத்தள விமான நிலையம் தனியார் மயப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா



(கொழும்பு)

மத்தள சர்வதேச விமான நிலையத்தை தனியார் மயமாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என விமான போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் விமான நிலையத்தின் ஒரு குறிப்பிட்ட பகுதி பங்குகளும் விற்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மத்தள விமான நிலையத்தை இலாபம் ஈட்டும் நிறுவனமாக மாற்ற வேண்டும். அத்துடன் நாட்டில் விமானப் போக்குவரத்து செயல்முறையை மறுசீரமைக்கும் போது அந்நியச் செலாவணியை ஈட்டும் வகையில் விமான நிலையம் மாற்றப்பட வேண்டும், அத்துடன் பராமரிப்பு தரத்தையும் மேம்படுத்த வேண்டும் என்று அமைச்சர் சில்வா குறிப்பிட்டார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் ஏதேனும் பிரச்சினைகள் ஏற்பட்டால் பாதுகாப்பு வலையமைப்பாக இரண்டாவது விமான நிலையமாக மத்தள விமான நிலையம் பயன்படுத்தப்படும் என்று அமைச்சர் தெரிவித்துள்ளார். (ம-7)

# கோழி முட்டைக்கு கட்டுப்பாட்டு விலை

(கொழும்பு)

கோழி முட்டைக்கு அதிகூடிய சில்லறை விலை விதித்து பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை கட்டளை பிறப்பித்துள்ளது.

நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கோழியின் வெள்ளை முட்டை 43 ரூபாயாகவும் பழுப்பு, சிவப்பு முட்டை 45 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது முட்டை 60 ரூபாயாக விற்பனை செய்யப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# புலனாய்வு திணைக்களம் ஹிருணிகாவுக்கு அழைப்பு

(கொழும்பு)

புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று சனிக்கிழமை காலை குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முன்னிலையாகுமாறு தனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் தொடர்பில் அவரிடம் வாக்குமூலம் பெறப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ம-7)

Win Repair
உங்கள் குளிர்சாதனப் பெட்டிகளும் சலவை இயந்திரங்களும் பழுதடைந்து விட்டது என கவலையா?
கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையிலும் உத்தரவாதத்துடனும் திருத்தித் தருகின்றோம். (12503)
077 964 8942

உடனடி வேலை வாய்ப்புக்கள்
EXECUTIVE OFFICER
✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/=
✓ வயது-22 தொடக்கம் 35
✓ தகுதி- பட்டதாரிகள் (C-4761)
V2 TRAVELS
AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER
போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்
49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் 0777-068-777

VISA விண்ணப்பங்கள்
அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள், ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension
இலங்கை விசா நீடித்து தரப்படும்
(C-4761)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A.சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

### மிக மோச...

மோசமான சமூக-பொருளாதார நெருக்கடியின் மத்தியில் உள்ளதாகவும் கர்ப்பவதிப் பெண்களின் வாழ்வாதாரத்தை இந்த நிலை பாதித்துள்ளதாகவும் ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின் உபகரணங்கள், மருந்து பற்றாக்குறை காரணமாக நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடியினால் கர்ப்பவதிப் பெண்கள் போஷாக்கற்ற உணவு மற்றும் உணவுத் தட்டுப்பாட்டால் பாரிய விளைவுகளை சந்திக்க நேரிடும் என UNFPA-இன் நிர்வாக இயக்குநர் டாக்டர் Natalia Kanem-I மேற்கோள்காட்டி ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. (ம-7)

### யாழ். நகர்...

குட்பட்ட நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளார். சடலத்தை மீட்டு அடையாளம் காணும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ம-7)

காதலியின் கள்ளக்காதலை கண்டுபிடிக்க

# ஹபாயா அணிந்து நடமாடிய காதலன் கைது

முஸ்லிம் பெண்கள் அணியும் ஹபாயாவை அணிந்து, மாறுவேடத்தில் நடமாடிய முஸ்லிம் இளைஞன் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி ரயில் நிலையத்தில் நடமாடிக் கொண்டிருந்த இளைஞனை அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் பிடித்து, காலி பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

நேற்றுக் காலை ரயில் நிலையத்துக்கு வந்திருந்த அவ்விளைஞன், கொழும்புக்குச் செல்வதற்காக ரயில் பற்றுச்சீட்டை பெற்றுள்ளார்.

அவரது குரல் தொடர்பில் சந்தேகம் அடைந்த பாதுகாப்பு அதிகாரிகள், அவரைப் பின்தொடர்ந்து கண்காணித்துள்ளனர்.

எனினும், முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடையுடன் அலைந்து திரிபவர் ஆண்ணொருவர் என்பதை பாதுகாப்பு அதிகாரிகள் இனங்கண்டு கொண்டனர். அதன்பின்னர் அவரை பிடித்து விசாரணைக்கு உட்படுத்தினர்.

தன்னுடைய காதலி இன்னுமொருவருடன் தொடர்பில் இருக்கிறார் என கேள்விப்பட்டேன். அவ்விருவரும் காலி ரயில் நிலையத்துக்கு வருகின்றனர் என்றும் தகவல் கிடைத்தது. அதன்பின்னரே, இவ்வாறு முகத்தை மறைத்துக்கொண்டு, பெண்களின் உடையில் இங்கு வந்தேன் என தெரிவித்துள்ளார். (ம-7)

# திருமணப் பதிவுகள் இலங்கையில் அதிகரிப்பு

2021 ஆம் ஆண்டில், ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 628 திருமணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2021ஆம் ஆண்டில், இலங்கையில் திருமணப் பதிவுகள் அதிகரித்துள்ளன.

2020 ஆம் ஆண்டு, ஒரு இலட்சத்து 43 ஆயிரத்து 61 திருமணங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளதாக, தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் தரவுகள் தெரிவிக்கின்றன. (ம-7)

### தமிழர்களின்...

தித்துள்ளதுடன், பிரித்தானியாவில் தமிழர்களின் பங்களிப்பிற்காகவும் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தில் இருந்து விலகியமை காரணமாக, இலங்கை மீது கடுமையான நிலைப்பாட்டை பிரயோகிப்பதில் சர்வதேச சமூகத்தின் உறுப்பினர்களுக்கு தனது ஆதரவை வழங்குவதாகவும் ரிஷி சுனக் தெரிவித்துள்ளதாக The Guardian செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பிலான ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு தனது ஆதரவை வழங்கியுள்ள ரிஷி சுனக், எதிர்கால தீர்ப்பாயத்தில் பயன்படுத்தக்கூடிய போர்க்குற்ற சான்றுகளை சேகரிப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தியுள்ளார்.

இதனிடையே, ரஷ்யர்கள் மீது இங்கிலாந்து விதித்துள்ள தடைகளைப் போன்று, இலங்கை அதிகாரிகள் மீது தடைவிதிப்பதற்கான சாத்தியம் தொடர்பிலும், பிரித்தானியவாழ் தமிழர் பிரதிநிதிகளுடன் ரிஷி சுனக் கலந்துரையாடியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கையின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பிலும் ரிஷி சுனக் கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மோசமான பொருளாதார நெருக்கடி, எல்லையில்லா பணவீக்கம், அடிப்படைத் தேவைகளின் பற்றாக்குறை தொடர்பிலும் அவர் கவனம் செலுத்தியுள்ளார். (ம-7)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் கைதடி சந்தியில் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
◆ A9 வீதியில் இருந்து 100m தூரத்தில்.
◆ யாழ்ப்பாண பல்கலைக்கழக சித்த மருத்துவபீடம் கைதடி ஆயுள் வைத்தியசாலை பின் எல்லைகள் மூன்று வழிப் பாதையுடன். (12501)
077 623 4204

நீர்க்கசிவினை நிரந்தரமாக நிறுத்துவதற்கு
உங்கள் வீடுகள், கட்டடங்கள், கோவில்கள், கடைகள் (மொட்டை மாடிகள், தண்ணீர்த்தொட்டி, வில்லுமண்டபம், முகட்டுக்கூரைகள், வெளிப்புறச் சுவர்கள், மேல்மாடி குளியல் அறைகள், நீரோடிகள்), வெடிப்புகள், நீர்க்கசிவுகளை உத்தரவாதச் சான்றிதழுடன் நிவர்த்தி செய்து தருகிறோம்.
மேலும் மாபிள் பதிக்கப்பட்ட குளியல் அறைகளில் ஏற்படும் நீர்க்கசிவுகளை மாபிளை உடைத்து சேதப்படுத்தாமல் சிறந்த இரசாயனங்கள் மூலம் நீர்க்கசிவினை நிறுத்தித்தருகிறோம்.
Skyline Water Proofing
1 சதுர அடி ரூ.200/- முதல்
No.89, Old Park Road, Jaffna, Sri Lanka.
077 722 0095/076 663 6481/021 221 4994
கிளிநொச்சி/முல்லைத்தீவு - 077 741
வவுனியா / மன்னார் - 077 279 07
(12500)

காணி விற்பனைக்கு
யாழ். நாவற்குழி சந்தியில் 24 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
❖ A9 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்.
❖ நாவற்குழி சந்தியில் இருந்து 500m தூரத்தில். ❖ மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்.
❖ A9 வீதியில் இருந்து 200m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று இலட்சம் (300,000/=) மட்டும்.
❖ இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
❖ யாழ். பஸ் நிலையத்தில் இருந்து 4Km தூரம்.
(12482)
நேரம் காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
076 490 5403, 076 491 2493, 076 490 6029

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.